# வேலணை மத்திய மகாவித்தியாலயப் பழைய மாணவர் சங்கம்கனடா போசாக்குணவுத் திட்டத்திற்கு மூன்றாம் கட்டமாக நிதியுதவி!

## கல்லூரியின் சிரேஸ்ட ஆசிரியை பாராட்டு!



வேலணை மத்திய மகா வித்தியாலயத்தில் தற்போது கல்வி கற்றுவரும் மாணவர்களுக்குப்போசாக்கு உணவு வழங்கும் திட்டத் திற்கு வேலணை ம.ம.வி. பழைய மாணவர்சங்கத்தினர் மீண்டும் 1125டொலர்களைக் கடந்த 22.05.99 அன்று அனுப்பி வைத்துள்ளார்கள். சத்துணவுகள் உட்கொள்ள முடியாத பொருளாதார நிலைமை காரணமாக உற்சாகமிழந்து கல்வியிலும் மாணவர்களுக்கு உதவிக் கரம் நீண்டவேண்டியது காலத்தின் கட்டாயம் என்பதனை நாம் நன்குணர்ந்து செயற்படுத்திவரும் இவ்வுதவியானது காலத்தால் செய்த பேருதவியாகக் கருதப்படும் என்பது திண்ணம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க இத்திட்டதைப் பாராட்டிக் கல்லூரியின் சிரேஸ்ட ஆசிரியை திருமதி. வேதவல்லி அரசரத்தினம் அவர்கள் கள் வளத்தைப் பெருக்கிக் கொண்டனர். போக்குவரத்தும் சீரற்று இருந்தது. சுற்றி வளையும் பாதைகளினூடாக கல்லூரிக்கு வருகின்ற மாணவர்கள் களைத்த முகத்துடனேயே காட்சியளித்தனர். அழிந்த பொருளாதாரத்தை மீண்டும் கட்டி யெழுப்பும் நிலையில் இருக்கும் பெற்றோரின் சிறார்களுக்கு போசாக்கு உணவு அவசியமாக இருந்தது. சோர்வு நீங்கி நம்சிறார் யானதும் எமது அதிபர் அக்கிளையுடன் தொடர்பு கொண்டபோது இதை நீண்ட காலச்செயற்பாடாகத் தாம் திட்டமிட்டிருப்பதாக பெருவிருப்புடன் தெரிவித்



கனடா பழைய மாணவர் சங்கத்தினரின் உதவியினால் பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்படுகின்றது. இதனைப் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் உப தலைவர்களில் ஒருவரான திரு. வா. தவச்செல்வம் அவர்களும், பொருளாளர் திரு சி.த. மகாலிங்கம் (ஓய்வுபெற்ற தபால் அதிபர் அவர்களும் வகுப்பாசிரியை செல்வி கலாரஜனி கனகலிங்கம் அவர்களும் பார்வை யிடுகின்றனர். பாடசாலை ஊழியர் திரு.க. குகனேஸ்வரன் உணவு

விளையாட்டுக்களிலும் ஊக்கங் குறைந்தவர்களாக உருவாகியுள்ள மாணவர்களுக்குச் சத்துள்ள உணவு வழங்குவதற்கு நிதியுதவியளிக்குமாறு கல்லூரியின் அதிபர்திரு.கு.கணேசலிங்கம் அவர்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்றுமேற்படி சங்கத்தினர் கட்டங்கட்டமாக நிதியுதவியளித்து வருவது யாவரும் அறிந்ததே. இது வரை இத்திட்டத்திற்காக 3500 டொலர்களை அனுப்பி வைத்துள்ளதாகச்சங்கத்தின் பொருளாளர் திரு. பொன் பஞ்சலிங்கம் அவர்கள் நம்நாட்டிற்குத் தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள இக் கட்டான சூழ்நிலையில் அங்கு கல்வி பயிலும் வறிய கடந்தவாரம் அனுப்பிய பாராட்டுச் செய்தியில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

உள்ளத்தில் ஒளி பெற உடல் உறுதியாக இருக்க வேண்டும் என்பது சுவாமி விவேகானந்தரின் கருத்து. அரசியல் அனர்த்தங்களால் இடம்பெயர்வு ஏற்பட்டபோது கூடுதலாகப் பாதிக்கப்பட்ட பகுதி தீவகமே. ஆறு வருடங்களாகப்பயன்படுத்தப்படாமல் காடடர்ந்தும் தரிசு நிலங்களாகவும் நம் பொன்விளையும் பூமி இருந்தது. மீனக் குடியேறியவுடனேயே வருமானம் பெறல் அரிதாக இருந்தது.

மண்ணை மட்டுமே நம்பியிராத ஒரு பகுதி மக்கள் கருத்தூன்றிக் கற்க மதிய உணவுஅளிக்கவேண்டியது அவசியமாயிற்று.

இந்நிலையில் பன்னாடுகளிலும் உள்ள பழைய மாணவர்சங்கங்களின்ஊடாக கல்லூரியின் தேவையைக் கூறி உதவி வேண்டினோம். ஒவ்வொருகிளைகளும் தம்மால் நடைமுறைப்படுத்தக் கூடிய திட்டங்களைப் பொறுப்பேற்றனர்.

பழைய மாணவர் சங்கக் கனடாக் கிளையினர் போசாக்குணவின் அவசியத்தை உணர்ந்து அத் திட்டத்தைப் பங்கேற்றுக் கொண்டனர். இது வாடிய பயிருக்கு நீர் தெளிப்பது போன்றது. இது செயற்கரிய செயலாகும்.

ஒருவருடம் பூர்த்தி தார். இது எமக்கு மகிழ்ச்சியான செய்தியாகும் இது இலகுவான செயலுமன்று.

உற்றாரை, ஊரை பேரை மறந்து அந்நிய கலாச்சாரத்துள் தம்மை அழித்துக் கொண்டு நம்மவர் பலர் மகிழும் காலத்தில் தாம் வருந்தி ஈட்டிய பொருளைத் தம் கல்லூரியின் இளைய சகோதரரின் கல்வி விருத்திக்காக அளிப்பது ஒரு தியாக உணர்வுமாகும். அறமுமாகும். இதனால் நம் சிறார்களிடையே நன்றியுணர்வும் பிறர் நலமும் வளரும். வள்ளுவர் கூறியது போல் அழிபசி தீர்த்தல் மறுமைக்கும் பயன்படும் ஒரு சேம நிதியாகும்.